**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.90
https://ngmtamil.in/

# கவிஞர் தமிழ்க்குழவியின் திருவருட்பிரகாச வள்ளலார் பிள்ளைத் தமிழில் திருக்குறள் பெறுமிடம்

[1]**அ. துரை முகிலன்,** தமிழ் - பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், Reg.No: B1/TAM24PDEC0169/2024, நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் – 641018, அலைபேசி எண் 8122928419.

[2]**முனைவர் மகேஸ்வரி. ப,** நெறியாளர், உதவிப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர், நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் – 641018, அலைபேசி எண் 9952705617.

**ஆய்வுச் சுருக்கம்**

பிள்ளைத்தமிழ் என்பது தமிழின் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும். பாட்டுடைத் தலைவனையோ தலைவியையோ குழந்தையாகப் பாவித்துப் பத்துப் பாடல்கள் வீதம் நூறு பாடல்கள் பாடப் பெறுவது பிள்ளைத்தமிழாகும். திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பாடிய பாடல்கள் உள்ளன. இதுவே பிள்ளைத்தமிழ் நூலுக்கு அடிப்படை என்பர். பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் சிறந்ததாகக் கருதப்படுவது குமரகுருபரர் எழுதிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழாகும.; கவிஞர் தமிழ்க்குழவி திருக்குறளின்மீது தீராக் காதல் கொண்டவர். அதன் வெளிப்பாடே அவர் இயற்றிய பிள்ளைத்தமிழ் நூல்களில் திருக்குறள் சிந்தனைகள் ஆழமாகப் பதியக் காரணமாகும். இதனை விளக்குமுகத்தான் கவிஞர் தமிழ்க்குழவியின் திருவருட்பிரகாச வள்ளலார் பிள்ளைத்தமிழில் திருக்குறள் பெறுமிடம் பற்றிக் கட்டுரைக்க முற்படுகிறது இக்கட்டுரை.

**திருவருட் பிரகாச வள்ளலார் பிள்ளைத்தமிழில் திருக்குறள்**

பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் (குறள். 972) என்ற தத்துவத்தை நிலைநாட்டும் வகையில் ‘உயிர்கள் யாவும் ஓர் நிறையே ஒவ்வொரு உயிரும் இறையம்சம்’ என்று கவிஞர் திருவருட்பிரகாச வள்ளலார் பிள்ளைத்தமிழில் பதிவு செய்துள்ளார்.

கொல்லாமையை வலியுறுத்தும் விதமாக ‘வேண்டாம் உயிர்ப்பலி’ (தால.ப.3.7) என்றும், ‘ஊனுண் போரைக் கண்டாலும் உயிர்ப்பலி ஆலயம் நிகழ்கையிலும்’ (தால.ப.3.6) என்றும்

குறிப்பிடுகிறார் கவிஞர். எந்த உயிரையும் கொல்லாமல் வாழும் அறநெறியைக் கடைபிடிப்பவரின் பெருமையை ஏற்றுச் சாவுகூட அவர் உயிரைப் பறிக்கத் தயங்கும் என்பார் வள்ளுவர். வள்ளுவரும் வள்ளலாரும் கொல்லாமையைக் கடைபிடித்தவர்களாவர்.

பறவையானது கூட்டைவிட்டுப் பறப்பது போல உயிரும் உடம்பைவிட்டு எந்நேரமும் பிரியலாம் எனும் வள்ளுவரின் சிந்தனையைக் கவிஞர் தம் நூலில் ‘புள் பறந்து போகுமுன் புனிதநிலை கூடுதற்கு’ (பிள்.4.4) என்னும் தொடரில் பதிவுசெய்துள்ளார். ‘குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே உடம்பொடு உயிரிடை நட்பு’ (கு.338) என்னும் குறள் இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

‘எண்ணிய எண்ணியாங் கெய்தும்’ (வள் 8.7 ) மற்றும் கண்ணில் முக்கியம் கல்வி ( வள்.8.7) என்னும் கவிஞரின் தொடர்கள் திருக்குறள் 666 மற்றும் கண்ணுடையார் என்பவர் கற்றோர் (கு. 393) ஆகிய குறட்பாக்களோடு ஒத்து விளங்குகின்றன.

அன்பும் அறனும் நிறைந்தது ஆன்மிகம். அன்பு உலகத்தின் அச்சாணி என்பதை வள்ளுவர் அன்பின் வழியது உயிர்நிலை என்றார். வள்ளலாரும் அன்பை அடிப்படையாகக் கொண்டு ஜீவகாருண்யமே (உயிர்களிடத்தில் அன்பு) மோட்சத்திற்கான வழி என்றார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் போலவே வள்ளுவரும் ஒருமித்த சிந்தனை கொண்டவர்களாகக் கொல்லாமை மற்றும் புலால் மறுத்தல்: பற்றிப் பேசியுள்ளனர். வள்ளுவர் திருக்குறளில் கொல்லாமை மற்றும் புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களை அமைத்துள்ளார். வள்ளலார் அதைக் கடந்து, கொல்லா விரதமே குலதெய்வம் என வாழ்நாள் முழுவதும் தீவிரமாகப் பின்பற்றினார். பசிப்பிணி போக்குதல் சிறந்த அறம் என்றார். மணிமேகலை எனும் காப்பியமும் இதனையே விளக்குகிறது. எனதோன் பசிப்பிணி யெனும் பாவியது தீர்த்தோhர்... என்கிறது. உலகிலுள்ள கொடுமைகளுக்கெல்லாம் காரணம் பசியே ஆகும். அதை ஒழித்து விட்டால் உலகம் அமைதி பெறும் என்பது உறுதியாகும். வடலூரில் சத்ய ஞான சபையை நிறுவி, மக்களின் பசிப்பிணியைப் போக்க அணையா அடுப்பை (தருமசாலை) உருவாக்கினார்.

கவிஞர் தமிழ்க்குழவி ஏற்றத்தாழ்வு கூடாது (வள்.பி.10.6) எனச் சாதி, மதம், பேதங்களைக் கடந்த மனிதநேயத்தை வலியுறுத்தியுள்ளார்.

‘வள்ளுவன் குறள்சொல் பாடலெல்லாம்
வாழ்வியலாகி பொழிந்தது என்னும்
வார்த்தைகள் கேட்பது என்றன்றே
வையகம் உய்வது திண்ணமென்பேன்’ (10.5)

வள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறியுள்ளார். இவ்விருவரின் சிந்தனைகளும் தமிழ் மண்ணின் தனிப்பெரும் ஆன்மிக மற்றும் சமூகச் சொத்துக்கள் ஆகும். குறட்பாவில் ‘பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதலைத் தலையாய அறமாகக் கருதுகிறார். மேற்கதி

வீடுபேறுகட்கு நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறி' என்று பரிமேலழகர் விளக்குவார்.

'நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி' (குறள்-324)

புலால் உண்ணாதவர்களையும், அதற்காக உயிர்களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிரினங்களும் வணங்கி வாழ்த்தும்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்';. (குறள்- 260)

எனும் குறள் வள்ளலாரின் குரலுக்கு நெருக்கமாகத் திகழக்கூடியதாய் அமைகிறது.

**முடிவுரை :**

இவ்வாறாகக் கவிஞர் தமிழ்க்குழவியின் திருவருட் பிரகாச வள்ளலார் பிள்ளைத்தமிழ் நூலின் வழி, கவிஞரின் மனத்தில் திருக்குறளின் சிந்தனைகள் ஆழமாகப் பதிந்திருப்பதை அறிய இயலுகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

[1]. திருக்குறள் தெளிவுரை – பேராசிரியர் அ. மாணிக்கம்
[2]. திருவருட் பிரகாச வள்ளலார் பிள்ளைத்தமிழ் - கவிஞர் தமிழ்க் குழவி